**<u>பி.வா.சா. 2 மாரிமுத்து</u>** <u>O.S.No. 2/2009</u> 20.07.2022

<u>3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அழைக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. 2 ம் பிரதிவாதி வழக்கறிஞர் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார். எனது பிரமாண வாக்குமூலத்திற்கான விபரங்களை வழக்கறிஞர் சொன்னார். நீதிமன்றத்தில் வைத்து அது தட்டச்சு செய்யப்பட்டது. 2 ம் பிரதிவாதி பெருமாள் 2009 ம் ஆண்டு வழக்கை தாக்கல் செய்தார். ஒப்பந்தத்தை அமல்படுத்த கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். 2 ம் பிரதிவாதி பெருமாள் வழக்கினுடைய வழக்கு எண் தெரியாது. 2 ம் பிரதிவாதி பெருமாள் தாக்கல் செய்த வழக்கின் சொத்தினுடைய சர்வே எண், அதன் விஸ்தீரணம் தெரியாது. நான் இதற்கு முன்பு வேறு எந்த பத்திரங்களிலும் சாட்சி கையெழுத்து போடவில்லை. திருவத்தேவர் மகன் காளிமுத்து அக்ரிமெண்டிற்கு பத்திர அலுவலகத்தில் வைத்து 2007 ஆம் ஆண்டு விபரம் சொன்னார். அந்த அக்ரிமெண்டிற்கு முத்திரை தாள் பெருமாள் தான் 4.11.2007 ல் வாங்கினார். அக்ரிமெண்ட் டைப் செய்யப்பட்டது. வெண்டர் அலுவலகத்தில் வைத்து டைப் செய்யப்பட்டது. எனது பிரமாண வாக்குமூலத்தில் கிரைய தொகையில் தாவா வழக்கின் 3 ம் பிரதிவாதியான காளிமுத்துக்கு கொடுக்கவேண்டிய அடமான கடனை செலுத்தி செல்லடித்து விட்டு தபசில் சொத்துக்களை நான் கிரையம் எழுதி பதிவு செய்யவேண்டியது என சரத்துகள் கண்டு 2 ம் பிரதிவாதிக்கும் வாதிகளின் தகப்பனார் T.காளிமுத்துக்கும் இடையே மேற்படி 4.11.2007 ம் தேதியில் கிரைய ஒப்பந்தப் பத்திரம் ஏற்பட்டது என்று சொல்லி உள்ளபோது பிவாசாஆ 3 கிரைய ஒப்பந்தத்தில் அவ்வாறு எதுவும் வாசகம் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பத்திரத்தை தட்டச்சு செய்தவர், வரைவு செய்தவர் என்று பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

ஒப்பந்தம் எழுதும்போது T.காளிமுத்து நான் மற்றும் 2ம் பிரதிவாதி பெருமாள், ஆகியோர் உடன் இருந்தோம். ஒரு கிரைய ஆவணம் எழுதும்போது அந்த கிரைய தொகை எவ்வளவு என்றும், எவ்வளவு காலத்திற்குள் முடிக்கவேண்டும் என்றும், வில்லங்கம் எதுவும் இருந்தால் அது எவ்வாறு தீர்த்துகொள்வது என்று விபரங்கள் அந்த கிரைய ஒப்பந்தத்தில் இருக்கும் என்று சொன்னால் சரிதான். அதே மாதிரி அதில் இருக்கும் வில்லங்கத்தை அதை யார் தீர்ப்பது என்று அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிடுவர் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தின் கண்ட நிபந்தனைகளின் படி கிரையம் செய்ய தரப்பினர்கள் தவறினால் அதற்கு என்ன பரிகாரம் என்று அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 3 கிரைய ஒப்பந்தத்தில் தரப்பினர்கள் தவறுகை செய்யும்போது பரிகாரம் குறித்து எந்த ஷரத்துக்களும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஒரு ஆவணத்தில் இயக்கி கொள்பவர்கள் அந்த ஆவணத்தில் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் செய்யவேண்டும் என்றால் சரிதான். பிவாசாஆ 3 கிரைய ஒப்பந்தத்தில் முதல் தாளான முத்திரை தாளில் யாருடைய கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் பிரதிவாதி T.காளிமுத்து தோன்றா தரப்பினர் என்று எனக்கு யார் சொன்னார் என்றால் வழக்கறிஞர் சொன்னார். எனது பிரமாண வாக்குமூலத்தில் அசல் வழக்கு எண். 2/09 சொல்லப்பட்டுள்ள 9, 10, 11, 13, மற்றும் 15 சொத்துக்கள் குறித்து 4.11.2007 ம் தேதி T.காளிமுத்து 2 ம் பிரதிவாதியான பெருமாளிடம் ரூபாய் 4 லட்சம் முன்பணமாக பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்று நான் சொல்லியுள்ள விபரம் சரிதான். ஆனால் அந்த விபரம் நான் கையெழுத்திட்டதாக சொல்லப்படும் பிவாசாஆ 3 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். K.காளிமுத்து எந்ததெந்த சொத்து சம்பந்தமாக என்ன பரிகாரம் கேட்டு என்ன வழக்கு எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று

எனக்கு தெரியாது. T.காளிமுத்துக்கும், K.காளிமுத்துக்கும் 14.4.2008ம் தேதி ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியாது. பிவாசாஆ 3ல் 10 1/2 ஏக்கர் சொத்திற்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. அதில் சொல்லப்பட்டுள்ள சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் 3ல் 1 பாகம் தான் ஒப்பந்தத்திற்கு உட்பட்டது என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்ததில் 3ல் 1பங்கு சமபந்தமாக எதுவும் குறிப்பிடதாபோது நான் எந்த அடிப்படையில் ஒப்பந்தத்தின்படி 3ல் 1 பங்கு சொத்திற்கான கிரைய தொகை ரூ.3,20,000/- போக ரூ.80,000/-த்தை T.காளிமுத்து கே.எம்.பெருமாளுக்கு தந்துவிடவேண்டும் என்று சொல்கிறேன் என்றால் T.காளிமுத்து பெருமாளுடைய வழக்கறிஞரிடம் நேரில் ஒப்புக்கொண்டதை வைத்து நான் சொல்கிறேன். அவ்வாறு 10 ஆண்டுகளுக்கு முன்பு கே.எம்.பெருமாளுடைய வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வந்து சொன்னார். அப்போது நானும், கே.எம். பெருமாளும் அங்கு இருந்தோம். மேற்சொன்ன விபரங்களை நான் என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கை ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவு போட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். K.காளிமுத்து தாக்கல் செய்த வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்று சொல்லி இருக்கும்போது எதன் அடிப்படையில் எனது முதல் விசாரணையில் அசல் வழக்கு எண். 172/2008 என்ற வழக்கு வஞ்சக கூட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்று நான் கூறியுள்ளது என்பது எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கே.காளிமுத்துவும், T.காளிமுத்துவும் மேலும் தி.காளிமுத்தவின் மகன்களான வாதிகளும் கூட்டணி சேர்ந்து மோசடியாக ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அசல் வழக்கு எண்.172/2008

தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொல்லி உள்ள விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. அந்த விபரத்தை எந்த அடிப்படையில் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை வழக்கில் தரப்பினர் போல் தாக்கல் செய்துள்ளதால் அவை ஏற்றுகொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ 3 கிரைய ஒப்பந்தத்தை இந்த வழக்கில் வாதிகள், பெருமாள், T.காளிமுத்து ஆகியோர்கள் வஞ்சக கூட்டணி சேர்ந்து கே.காளிமுத்துவிடமிருந்து அதிகப்படியான கிரைய தொகையை மோசடியாக பெறுவதற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் அதற்கு உடந்தையாக இருந்த நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த பொய்யான ஆவணத்திற்கு உடந்தையாக இருந்து தற்போது அதற்கு ஆதரவாக ஆதாயம் பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 3 ஆவணம் செல்லத்ததக்கதில்லை என்றாலும் அதை K.காளிமுத்துவை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை